தொகுதி 2, வெளியீடு 1

இணை நிதியுதவி – எரஸ்மஸ் + ஐரோப்பிய ஒன்றியத்தின் நிகழ்ச்சித்திட்டம்

# IncEdu செய்தி மடல்

## ஜீன் 2021







**"இலங்கைப் பல்கலைக்கழகங்களில் மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களுக்கான உள்ளீர்தல் கல்வி நடவடிக்கைகளை விருத்தி செய்தல்"**

---

### இந்த செய்தி மடலில்

- IncEdu தொடர்பான
- உலகளாவிய தொற்று நோயின் சவால்கள் பற்றிய
- நிகழ்ச்சித் திட்ட நடவடிக்கைகள் பற்றிய
- செய்திகளும் மற்றும் நிகழ்வுகள்

உள்ளடக்கப்பட்டுள்ளன

## இலங்கைப் பல்கலைக்கழகங்களில் மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களுக்கான உள்ளீர்ப்பு கல்வியினை விருத்தி செய்தல்.

மேற்படி நிகழ்ச்சித்திட்டமானது இதுவரையில் உயர்கல்வியில் போதுமான அளவிற்கு கவனத்தில் கொள்ளப்படாத விடயத்தின் மீது கவனம் செலுத்துகின்றது. இலங்கைப் பல்கலைக்கழகங்களில் மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களுக்கு சமமான சந்தர்ப்பத்தினை வழங்குவதற்கான ஓர் ஒத்தாசையுடன் கூடியதான ஒழுங்கு முறை ஒன்றினை விருத்தி செய்வதனை நோக்காகக் கொண்டே இத்திட்டம் விருத்தி செய்யப்பட்டுள்ளது.

இந் நிகழ்ச்சித்திட்டம் மூன்று வருட காலத்தை உள்ளடக்கியது. (2020 – 2013) என்பதுடன் இதன் பிரதான செயற்பாடுகளாக சமூக மட்ட விழிப்புணர்வு, இலங்கை பங்குதாரர் பல்கலைக்கழகங்களில் உள்ள கல்வி சார் உத்தியோகத்தர்களின் இயலுமை, ஆற்றல் விருத்தி என்பதுடன் நவீனத்துவமான தொழில்நுட்பத்துடன் கூடிய உபகரணங்களை கொண்டதான ஓர் ஒத்தாசை மையத்தை நிறுத்துவதாகும்.

சகலருக்கும் கல்வியினை வழங்குதல் வேண்டும். அது அவர்களின் அடிப்படை உரிமை ஆகும். எனவே எந்தவொரு பழிவாங்கலும் இன்றி கல்வி வழங்கப்பட வேண்டும் என்பதே இத்திட்டத்தின் மிக முக்கிய நோக்கமாகும்.

இந்த நிகழ்ச்சித் திட்டமானது ஐரோப்பாவில் மிகப் பிரபல்யமான 4 பல்கலைக்கழகங்களையும் இலங்கையிலிருந்து 4 பல்கலைக்கழகங்களையும் உள்ளடக்கியதான ஒரு திட்டமாகும்.

அவை முறையே,

- *மஸ்ரயாக் பல்கலைகழகம் - செக்குடியரசு*
- *செக்ரப் பல்கலைகழகம் - க்ரோசியா*
- *ட்ரான்சில்வேனியக பல்கலைகழகம் - ருமேனியா*
- *உப்சலா பல்கலைகழகம் - சுவிடன்*
- *பேராதனை பல்கலைகழகம் - இலங்கை*
- *உருகுணை பல்கலைகழகம் - இலங்கை*
- *கிழக்கு பல்கலைகழகம் - இலங்கை*
- *இலங்கை தொழில்நுட்ப வளாகம்*



இந்த செயற்திட்டத்தின் பிரதான நோக்கம் இலங்கைப் பல்கலைக்கழகங்களில் மாற்றுத்திறனுடன் உள்ள மாணவர்கள் சமமான கல்விக்கான வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதற்கான முறைகளை விருத்தி செய்வதற்கு உதவியளித்தலாகும். இது மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களுக்கு உயர் கல்வியினை பெற்றுக்கொள்வதற்கு உள்ள வாய்ப்பினை உறுதிப்படுத்துவதாகும். முறையான விழிப்புணர்வினை ஏற்படுத்துவதன் ஊடாக அவர்களுக்கு எதிரான பாரபட்சங்களை இல்லாது செய்தல் மற்றும் இலங்கை பல்கலைக்கழகங்களில் மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களுக்கு உதவுவதற்கான நிலைபேறான உதவி வலையமைப்பினை உருவாக்குவதாகும்.

# பூகோள ரீதியான தொற்றுநோயின் சவால்கள்



**பேராசிரியர் அனோமா அபயரத்ன**

**ஒன்றிணைந்த நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர்**

## நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளரிடம் இருந்ததான செய்தி.


இந்த நிகழ்ச்சித் திட்டமானது மூன்று வருட காலத்தின் முதல் அரையாண்டை பூர்த்தி செய்கின்றது. இந் நிகழ்ச்சித்திட்டத்தின் முதலாவது இலக்காக அமைவது தேவை மதிப்பீடு சம்பந்தமானது. இந்த மதிப்பீடு நிறைவு பெற்றுள்ளது என்பதுடன் அதன் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இந்த அறிக்கையில் மாற்றுத்திறனாளிகள் கொண்ட மாணவர்களின் தேவைகளின் பகுப்பாய்வு அமையப்பெற்றுள்ளது. பங்குதாரர் பல்கலைக்கழகங்களில் மாற்றுத்திறன் கொண்ட மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் மற்றும் தடைகளை விவரிப்பதாக உள்ளது. இவ்வாறான கண்டுபிடிப்புகள் இந்நிகழ்ச்சித்திட்ட செயற்பாடுகளுக்கு உதவுவதுடன் பல்கலைக்கழகங்களில் மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களுக்காக ஓர் பொருத்தமான சூழலை உருவாக்குவதற்கு வழிவகுக்கின்றது எனவும் கூறலாம்.

இந்நிகழ்ச்சித் திட்டத்தின் இரண்டாவது இலக்காக அமைவது என்னவெனில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஓர் மாதிரி மையம் ஒன்றினை நிறுவுவதாகும். எவ்வாறாயினும் தற்போது இடம்பெற்றுள்ள தொற்று நோயின் காரணமாக வடிவமைத்தல், மீளமைத்தல், இணையத்தள வசதிகள் என்பவை மிக மந்தமாக இடம்பெறுகின்றது என்பதுடன் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் இணை நிதியாக்கத்தின் உதவியுடன் மேற்படி வேலைகள் ஓரளவிற்கு நிறைவுக்கு வந்துள்ளதுடன் மஸரயாக் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப ஆலோசனையுடன் உபகரண கொள்வனவு தற்போது முன்னேற்றத்துடன் உள்ளது.

தொற்று நோய் தொடர்பான கெடுபிடிகள் காரணமாக திட்டமிடப்பட்ட சில செயற்பாடுகள் குறிப்பாக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் (பிரயாணத்துடன் தொடர்புபட்ட) சிலவற்றை மீள் ஒழுங்கமைக்க வேண்டியிருந்தது. மேலும் நிலவுகின்ற தொற்றுநோய் சூழ்நிலையை கருத்திற்கொண்டு நிதி முகவரானது நிகழ்ச்சித்திட்ட கால எல்லையினை மேலும் ஒரு வருடத்திற்கு நீடித்துள்ளது. ஆதலினால் நிகழச்சித்திட்டக் குழுவானது தனது திட்டமிடப்பட்ட சகல நடவடிக்கைகளையும் மற்றும் இலக்குகளையும் எய்திக்கொள்ள முடியும் என்பதில் உறுதியாக உள்ளது.

தொற்று நோயானது சில நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகள் சாத்தியமற்றதொன்று என கூறப்பட்ட போதிலும் கூட இந்த நிகழ்ச்சித் திட்ட குழுவானது இந்நிகழ்ச்சித்திட்ட செயற்பாடுகள் வெற்றிகரமாக நிறைவடையும் என்பதில் ஆர்வமாக உள்ளனர் என கூறலாம். மேலும், இந்நிகழ்ச்சித் திட்டத்தின் இரண்டாவது அரைப்பகுதியில் நாம் அதிகளவில் எய்திக்கொள்வோம் என்பதில் உறுதியாக உள்ளோம்.

# தேவை மதிப்பீடு கள ஆய்வு அறிக்கை




இணையத்தளத்தினூடாக பங்குதாரர் பல்கலைக்கழகங்களுக்கு இடையே ஓர் கள ஆய்வு நிகழ்த்தப்பட்டது. இதன் நோக்கம் என்னவென்றால் இலங்கைப் பல்கலைக்கழகங்களில் மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களுக்கு ஓர் வகுப்பறைச் சூழலை உருவாக்குவதாகும்.

நிகழ்ச்சித்திட்ட குழுவானது ஒரு கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்தினை தயாரித்ததுடன் மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களுக்கு தற்போதுள்ள வசதிகள், அவர்களின் தேவைகள், சகபாடி மாணவர்களுக்கு இடையிலான விழிப்புணர்வு, பல்கலைக்கழக கல்விசார் விழிப்புணர்வு மற்றும் கல்விசார் உழியர்கள், சகபாடிகள் மற்றும் பெற்றோர்களுக்குகிடையே எதிர்பார்க்கப்படுகின்ற தேவைகள் தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்வதனை நோக்காகக் கொண்டிருந்தது எனலாம்.

## கள ஆய்வின் முடிவுகள்

இந்த ஆய்விற்காக தெரிவுசெய்யப்பட்ட மாற்றுத்திறன் கொண்ட மாணவர்கள் சமூக விஞ்ஞானம் மற்றும் மானிடவியல் துறை சார்ந்தவர்கள் என்றே கூறலாம். ஏனைய துறை சார்ந்த மாணவர்கள் இக்கள ஆய்விற்கு உட்படுத்திக்கொள்ளவில்லை. ஆயினும் ஏனைய துறை சார்ந்த மாணவர்களுக்கும் தேவைப்படின் இந்த ஆய்வின் முடிவினை பிரயோகித்துக் கொள்ள முடியும்.

- மாதிரிக்கான 14 பீடங்களில் இருந்தான கல்விசார் விரிவுரையாளர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.
- நன்கு திறமை வாய்ந்த விரிவுரையாளர்கள் குழுவினால் மாற்றுத்திறனாளிகள் கற்பிக்கப்பட்டனர்.
- விரிவுரையாளர்கள் தமக்கிடையே ஏதோ ஒரு வகையில் மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களுக்கு கற்பித்ததுடன்
- இக்கற்கை மாதிரியானது ஏனைய பீடங்களில் உள்ள மாணவர்களை உள்ளடக்கவில்லை. எவ்வாறாயினும் விரிவுரையாளர்கள் ஏனைய பீடங்களிலும் மாற்றுத்திறன் கொண்ட மாணவர்கள் உண்டு என்பதனை குறிப்பிடுகின்றனர்.
- மாதிரி சகபாடிகள் குறிப்பிட்ட பல்கலைக்கழகத்தின் வேவ்வேறு பீடங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்டனர். இலங்கை தொழில்நுட்ப வளாகத்தினை விட ஏனையோர் கலைப் பீடத்திலிருந்தே தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.
- சகபாடிகளின் பெரும்பான்மையோருக்கு மாற்றுத்திறன் கொண்ட மாணவர்கள் வகுப்பில் உள்ளனர் என்பதே தெரியாமல் இருந்தது.
- பல்கலைக்கழகங்களில் பௌதீக ரீதியாக மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களுக்கு உதவி ஒத்தாசை வழங்க வேண்டும் என்பதில் ஓர் உயர்ந்த எதிர்பார்ப்பு இருந்தது.
- மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களின் வகைப்படுத்தலில் அனேகமானோர் பார்வைக் குறைபாடு உடையவராகவே இருந்தனர். ஒரு சிலர் செவிப் புலன் குறைபாடு உடையவராக இருந்ததுடன் இவர்கள் அனைவரும் உளரீதியாக பாதிக்கப்பட்டும் இருந்தனர்.
- மாற்றுத்திறன் உடைய மாணவர்களின் பெற்றோர் குறைந்த வருமானம் பெறும் குடும்பத்தினராகவும், தொழில் வாய்ப்பற்ற குடும்பத்தினராகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கள ஆய்வின் முடிவுகளின்படி பரிந்துரைக்கப்பட்ட சிபாரிசுகள்

- மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களுக்கான தேவைகள் தொடர்பிலான விழிப்புணர்வின் முக்கியத்துவம்.
- மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களுக்கான வசதி வாய்ப்பினை அதிகரித்தல்.
- விசேட கல்வி தொடர்பாக தொடர்ச்சியான தொழில்சார் பயிற்சி நிகழ்வுகளை விரிவுரையாளர்களுக்கும் சகபாடிகளுக்கும் நிகழ்த்தப்பெறுதல்.
- மாற்றுத்திறன் கொண்ட மாணவர்கள் தொடர்பான நேர்நிலை உளப்பாங்கினை சகபாடிகளுக்கிடையே அதிகரித்தல்.
- விரிவுரையாளர்கள், சகபாடிகள் மற்றும் பெற்றோர்கள் குறிப்பிடப்படுவது போன்று மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களுக்கான கற்றலில் விசேட கவனம் செலுத்துதல்.
- பாடத்திட்ட வரைதலின் போது மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களுக்கு ஏற்ற விதத்திலான கற்பித்தல் நுணுக்கங்களை அறிமுகம் செய்தல்.
- இத்திட்டத்தினுள் உள்வாங்கியிருக்கின்ற 4 பல்கலைக்கழகங்களிலும் மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களுக்கான குறிப்பாக பார்வை குறைபாடு உடைய மற்றும் செவிப்புலன் ஆற்றல் அல்லாத மாணவர்களுக்கான பௌதீக வளங்களை விருத்தி செய்தல்.
- பௌதீக வளவிருத்தியில் மாற்றுத்திறன் கொண்ட மாணவர்கள் இலகுவாக கட்டிடங்களுக்குள்ளும் விரிவுரை மண்டபங்களுக்குள்ளும், வாசிகசாலை, கழிப்பறை மற்றும் விடுதிகளுக்கு செல்லக்கூடிய வாய்ப்பினை முன்னேற்றக்கூடியதாக இருக்க வேண்டும்.
- மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களின் கல்விசார் நடவடிக்கைகளின் தேவையினை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் துணைப் பாடநூல்கள், இணையத்தள கற்கை வசதிகள், இலத்திரனியல் பாடநூல்கள், கணனி மென்பொதிகள், ஒப்படைகள், பரீட்சை ஆவணங்கள் என்பவற்றை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுத்தல்.
- மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களுக்கு இடையே நிலவுகின்ற திருப்தியின்மை தொடர்பான காரணங்களை கண்டறிவதற்கான ஆய்வுகளை நிகழ்த்துதல்.
- மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களுடைய ஆங்கில அறிவினை விருத்தி செய்யும் நோக்கில் நவீன தொழில்நுட்பத்துடன் கூடியதான கருவிகளை பெற்றுக்கொடுத்து பிரித்தியேகமான அறைகளை ஒதுக்கி, இவ்வாறான மாணவர்களுக்கு கற்பிக்க கூடியதான பயிற்சி பெற்ற விரிவுரையாளர்கள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை பதவிக்கு அமர்த்துதல் வேண்டும்.

**முழுமையான கள ஆய்வு அறிக்கையினை பெற்றுக்கொள்ள இங்கே கிளிக் செய்யவும்**

## பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களுக்கான மாதிரி வள நிலையம் ஒன்றை ஸ்தாபித்தல





உள்ளீர்த்தல் கல்வி நிகழ்ச்சித்திட்டத்தின் விளைவாக பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஓர் மாதிரி வள நிலையம் ஒன்றை ஸ்தாபிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இந்த அலகு இலங்கையிலுள்ள ஏனைய பங்குதாரர்களுக்கு ஓர் மாதிரியாக செயற்படும்.

வடிவமைப்பு, மீள்திருத்தம் மற்றும் இணையத்தள வசதி போன்ற செயற்பாடுகள் இந்த மாதிரி வள நிலையத்தில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்த அலகிற்கு பேராதனைப் பல்கலைக்கழகமும் உள்ளீர்த்தல் நிகழ்ச்சித்திட்டமும் இணை நிதி உதவியாளர்களாக உள்ளனர். இந்த நிலையத்திற்கு தேவையான தொழிநுட்ப வசதிகள் குறிப்பாக கணிணி மென்பொருட்கள் அடையாளப்படுத்தப்பட்டிருப்பதுடன் அவற்றைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கைகளும் முன்னேற்றத்தில் உள்ளன.

## இலங்கை தொழிநுட்ப வளாகத்தில் "எரஸ்மஸ்" தினக் கொண்டாட்டம்

பல்கலைக்கழக சமூகத்திற்கு ஐரோப்பிய சங்கத்தின் அனுசரணையுடன் முன்னெடுத்து செல்லப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நோக்கில் 2020ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 15ம் திகதி 'எரஸ்மஸ்' தினம் இலங்கை தொழிநுட்ப வளாகத்தில் நிகழ்த்தப்பட்டது. இந்நிகழ்வில் உள்ளீர்ப்பு நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான ஓர் முன்மொழிவு கலாநிதி நந்த குணவர்த்தன அவர்களால் நிகழ்த்தப்பட்டது.

இலங்கை மற்றும் மாலைதீவிற்கான ஐரோப்பிய சங்கத்தின் தலைமை செயற்பாட்டு அதிகாரியான திரு. பிரன். எஸ் என்பவர் இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பங்கேற்றார்.






## உள்ளீர்ப்பு மதிப்பீடு தொடர்பான இணையவழிக் கலந்துரையாடல். உயர்கல்வி வகுப்பறையில் சமமான மதிப்பீடுகளை வரைபுபடுத்துதலின் பிரதிபலிப்புக்கள

இலங்கை தொழிநுட்ப பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம், உருகுணை பல்கலைக்கழகம், மற்றும் கிழக்கு பல்கலைக்கழகம், என்பவற்றுடன் இணைந்து இலங்கை பல்கலைக்கழகங்களில் மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களின் உள்ளீர்த்தல் கல்வியை விருத்தி செய்வது எனும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஓர் விசேட கலந்துரையாடல் நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தனர். “உயர்கல்வி வகுப்பறையில் சமமான மதிப்பீடுகளை வரைபுபடுத்துதலின் பிரதிபலிப்புக்கள்” எனும் தலைப்பில் 2021ம் ஆண்டு ஜூலை 08ம் திகதி நிகழ்த்தப்பட்டது.





**பேசியவர் - சாலினி அபயவிக்ரம**

இந்த அமர்வு கொழும்பு பல்கலைக்கழகத்தில் ஆங்கிலத்துறையின் விரிவுரையாளரான செல்வி சாலினி அபேசேகர என்பரால் நிகழ்த்தப்பட்து. மாற்றுத்திறன் கல்வி தொடர்பாக ஆராய்ச்சியில் அவர் ஈடுபட்டிருந்ததனால் மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களுக்கான பொதுவான கற்றல் செயற்பாடுகள் பற்றி தனது கருத்தினை முன்வைத்தார். அவர் தனது ஆய்வின் விருப்பார்வமாக மொழிக்கும் உளநலத்திற்குமிடையேயான இடையூட்டத்தைப் பற்றி தனது கருத்தினை முன்வைத்தார். செல்வி சாளினியின் தலைப்பு தொடர்பான முன்வைப்பானது சிந்தனையை துண்டுவதாகவும், தகவல் பரிமாற்றமுடையதாகவும் இருந்தது.

குறித்த இவ் அமர்வு கேள்வி மற்றும் பதில் நேரத்திற்காக ஒதுக்கப்பட்டது. இந்த சந்தர்ப்பத்தில் உயர்கல்வி வகுப்பறையில் சமத்துவமான மதிப்பீடுகளை வடிவமைப்பதிலுள்ள சவால்கள் பற்றி வருகை தந்தவர்களினால் கலந்துரையாடப்பட்டது.

இந்த அமர்வில் உள்ளீர்த்தல் கல்வி தொடர்பான இலங்கை நிகழ்ச்சித்திட்ட பங்குதாரர்களும் இலங்கை பல்கலைக்கழகங்களில் உள்ள மாணவர்கள், உத்தியோகத்தர்களும் குறிப்பாக பேராதனை பல்கலைக்கழகங்களிள் இருந்து மாற்றுத்திறன் கொண்ட மாணவர்கள் சிலரும் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.





# செய்திகளும் நிகழ்வுகளும்

## திட்டக்குழு கூட்டணி

Covid 19 தொற்று நோய் பரவியிருந்ததால் அனைத்து திட்ட கூட்டங்களும் இணையத்தளத்தின் ஊடாகவே நிகழ்த்தப்பட்டது. உலகெங்கிலும் உள்ள பங்குதாரர்கள் இந்த இணையத்தளத்தின் ஊடான கூட்டங்களில் பங்கேற்றுக் கொண்டனர்.

## வசதியுடன் கூடிய தொழிநுட்பம் எனும் தலைப்பினாலான களப்பயிற்சி பட்டறை

செக்கஸ்லோவாக்கிய நாட்டிலுள்ள மசரேயாப் பல்கலைக்கழகத்தினால் 2020ம் ஆண்டு ஜுலை 29ம் திகதி இப் பயிற்சிப்பட்டறை நிகழ்த்தப்பட்டது.

## உதவும் தொழிநுட்பம் மற்றும் தகவல் தொடர்பான கலந்துரையாடல் பேராதனை பல்கலைக்கழகத்தில்

மேற்படி தலைப்பினாலான கலந்துரையாடல்கள் 2020ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 04, 10 மற்றும் 17ம் திகதிகளில் நிகழ்த்தப்பட்டது.

## பேராதனை பல்கலைக்கழகத்தில் விசேட தேவைகளுக்கான வள நிலையத்தில் கிடைக்கக் கூடியதாக இருந்ததான உபகரணங்கள் மீதான செயல் விளக்கம்

மேற்படி நிலையத்திலுள்ள உபகரணங்கள் தொடர்பான செயல் விளக்கமானது கலாநிதி லி. செனவீர மற்றும் அந்நிலைய உத்தியோகத்தர்களினால் பேராதனை பல்கலைக்கழகத்தில் உள்ளீர்த்தல் கல்வி நிகழ்ச்சித்திட்டத்தின் அங்கத்தவர்களுக்கு நிகழ்த்திக்காட்டப்பட்டது. கலை மற்றும் மாற்றுத்திறன் கற்கைகளை பயிலும் மாணவர்கள் இந்த இந்த நிகழ்வில் பங்கேற்றுக் கொண்டனர்.

## கண்டியிலுள்ள செவிப்புலன் மற்றும் விழிப்புலனற்ற பாடசாலைக்கான விஜயம்

கண்டியின் டொடம்வல எனும் ஊரில் அமைந்துள்ள செவிப்புலன் மற்றும் விழிப்புலன் பற்றிய செங்கடகல பாடசாலைக்கு பேராசிரியர் அனோமா அவேரத்தின, கலாநிதி லி செனவீர, மற்றும் செல்வி நிரோசி செலவிரத்ன ஆகியோர் விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தனர்.

# செய்திகளும் நிகழ்வுகளும்

**ட்றான்சில்வேனியாவில் உள்ள விறஸ்சோவா பல்கலைக்கழகத்தின் கல்விசார் உத்தியோகத்தர்களுக்கான நிகழ்ச்சித்திட்ட முன்வைப்பு**

உள்ளீர்ப்பு கல்வி நிகழ்ச்சித்திட்டத்தின் தற்போதைய செயற்பாட்டின் முன்னேற்றம் தொடர்பாக மேற்படி குறிப்பிடப்பட்டுள்ள பல்கலைக்கழகத்தின் சமூகவிஞ்ஞானங்கள் மற்றும் தொடர்பாடல் துறை கூட்டத்தின் போது முன்வைப்பு ஒன்று நிகழ்த்தப்பட்டது. குறித்த

**சுவிடன் நாட்டில் உள்ள உப்சலா பல்கலைக்கழகத்தில் கற்றல் ஆலோசகருக்கு நிகழ்ச்சித்திட்ட முன்வைப்பு நிகழ்த்தியமை**

உப்சலா பல்கலைக்கழகத்தில் உள்ளீர்த்தல் கல்வி நிகழ்சித்திட்டத்தின் குழுவினர் 2020 ஆம் ஆண்டு மார்ச் 24 ஆம் திகதி மேற்படி முன்வைப்பினை நிகழ்த்தினர்.

**சுவிடன் நாட்டில் உப்சலா பல்கலைக்கழகத்தில் உள்ள "பூகோள பங்குதாரர்கள் அலகு" உத்தியோகத்தர்களுக்கு நிகழ்ச்சித்திட்ட முன்வைப்பு**

2021 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி மேற்குறிப்பிட்ட அலகு உத்தியோகத்தர்களுக்கு நிகழ்திட்ட முன்வைப்பு ஒன்று நிகழ்தப்பட்டது.. குறித்த துறைசார்ந்த கல்விசார் விரிவுரையாளர்கள் 27 பேர் இதில் கலந்து கொண்டனர்.

**உப்சலா பல்கலைக்கழகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் உள்ளீர்ப்புக் கல்வி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான விடயங்கள் பதிவேற்றம்**

சர்வதேச இணைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் எனும் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் கீழ் ஆங்கிலம் மற்றும் சுவிடன் மொழிகளில் உள்ளீர்ப்பு நிகழ்ச்சித்திட்ட செயற்பாடுகள் பதிவேற்றம் செய்யப்பட்டன

**ருமேனிய நாட்டில் உள்ள விறஸ்சோவா பல்கலைக்கழக மாணவர்களுக்கு உள்ளீர்ப்பு கல்வி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான முன்வைப்பு நிகழ்த்தியமை**

விறஸ்சோவா பல்கலைக்கழகத்திலுள்ள இரண்டாம் வருட கலைப்பட்டப்படிப்பின் நிகழ்ச்சித்திட்டத்தில் தொடர்பாடல் மற்றும் பொது உறவுகள் மாணவர்களுக்கு ஓர் நிகழ்ச்சித்திட்ட முன்வைப்பு நிகழ்தப்பட்டது.

இணை நிதியுதவி – எரஸ்மஸ் + ஐரோப்பிய ஒன்றியத்தின் நிகழ்ச்சித்திட்டம்

## பங்குதாரர்கள்

## எங்களைத் தொடர்புகொள்ள

திட்ட இணைப்பாளர்
பேராசிரியர் அனோமா அபயரட்ன,
சிரேஷ்ட பேராசிரியர் பொருளியல்,
பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை

மின்னஞ்சல் : inceducbhe@gmail.com / incedu@pdn.ac.lk
இணையத்தளம் : www.pdn.ac.lk/cbhe-incedu/

இந்த செய்திமடலை தயாரிப்பதற்கான நிதிப் பங்களிப்பு ஐரோப்பிய ஒன்றியத்தினால் வழங்கப்பட்டுள்ளது. இதில் உள்ளடங்கியிருக்கும் விடயங்கள் இதன் உருவாக்குநரையே சாரும் எந்த வகையிலும் இதன் உள்ளடக்கத்திற்கு ஐரோப்பிய ஒன்றியம் பொறுப்பாகாது.